**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC.568/2022**

**Prosecution witness : அ.சா.6** **Date : 03.07.2025.**

| | |
|---|---|
| **Name : ராஜன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2021ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்த போது கடந்த 26.09.2021-ம் தேதி இரவு 8 மணிக்கு ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த ரமேஷ்குமார், த/பெ தங்கவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து, பின்னர் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப ஜலகண்டாபுரம் காவல் நிலைய குற்றஎண்.302/2021 ச/பி 279, 337 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.**

2) கடந்த 27.09.2021-ம் தேதியன்று இரவு 8 மணிக்கு சம்பவயிடமான காப்பரத்தாம்பட்டி சுடுகாடு அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சேட்டு மற்றும் பார்த்திபன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தேன். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.**

3) பிறகு ரமேஷ்குமார், ரவி, ராமச்சந்திரன், பெரியண்ணன், அழகேசன், பழனிசாமி, தங்கராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட ரமேஷ்குமார் என்பவர் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. அவர் வழங்கிய **விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 ஆகும்.**

4) இவ்வழக்கில் காயம்பட்ட ரவி என்பவர் கார்த்திக் மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரவீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. அவர் வழங்கிய **காயச் சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆகும்.**

5) இவ்வழக்கில் காயம்பட்ட ராமசந்திரன் என்பவர் கார்த்திக் மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரவீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. அவர் வழங்கிய **காயச் சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகும்.**

6) இவ்வழக்கில் காயம்பட்ட பெரியண்ணன் என்பவர் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் நாற்றாயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. அவர் வழங்கிய **விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆகும்.**

7) விபத்தில் ஈடுபட்ட TN-30-BU-9207 என்ற Honda shine இரு சக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.தங்கராஜ் வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு அறிக்கை அ.சா.ஆ.10. ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட TN-30-AV-5359 என்ற Honda இரு சக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.தங்கராஜ் வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு**

**அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும்.** விபத்தில் ஈடுபட்ட TN–93–B–9373 என்ற Honda இரு சக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.தங்கராஜ் வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளறு அறிக்கை அ.சா.ஆ.12. ஆகும்.** இவ்வழக்கின் எதிரி கடந்த 23.11.2021ம் தேதி மதியம் 2 மணிக்கு நிலையத்தின் வைத்து கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார். இவ்வழக்கில் நான் எதிரியின் வாகனத்திற்கு பதிவு சான்று, இன்சூரன்ஸ், ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும், விபத்தின் போது தலைக்கவசம் அணியாததாலும் பிரிவு 192, 196, 129, 181(3) M.V.Act மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் பிரிவுகளை மாறுதல் அறிக்கை வாயிலாக சேர்த்தேன்.

8) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 24.11.2021–ம் தேதி குற்றஎண்.302/2021 ச/பி 279, 337 இதச பிரிவிலிருந்து குற்ற எண்.302/2021 ச/பி 279, 337, 338 இதச உ/இ 192(1), 196, 129, 181 (3) M.V.Act ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ. 13** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

9) என் விசாரணையின் படி இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று தெரிந்து கொண்டேன் என்றால் வாதி அவருடைய TN–30–BU–9207 என்ற Honda shine வண்டியை சின்னப்பம்பட்டி டூ ஜலகண்டாபுரம் நோக்கி ஓட்டி சென்ற போது சம்பவயிடத்தில் TN–93–B–9373 என்ற Honda வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து வாதியின் வாகனத்தின் பின்னால் மோதியதில் வாதி நிலைதடுமாறியும் கரிக்காப்பட்டியை நோக்கி வந்த TN–30–AV–5359 என்ற வாகனத்தை ஓட்டி வந்த ராமசந்திரன் மீது மோதியதாக தெரிந்து கொண்டேன்.

10) இந்த வழக்கில் புகார்தாரரின் வாகனமான TN–30–BU–9207 என்ற Honda shine வாகனத்திற்கு பின்புற சேதாரம் இல்லை என்று மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அளித்துள்ளார் என்றால் ஆமாம். இவ்வழக்கு விபத்தில் ஈடுபட்ட எதிரி வாகனத்தை தவிர மற்ற இரண்டு இரு சக்கர வாகனங்களின் ஓட்டுநர்களுக்கு ஓட்டுநர் உரிமமோ அல்லது இரு சக்கர வாகனத்திற்கு காப்பு சான்றிதழோ இல்லை என்று தான் ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆமாம்.

11) இரு சக்கர வாகனத்தை ஓட்டிய மற்ற இரு நபர்களும் வாகனம் ஓட்டும் போது தலைகவசம் அணிந்திருந்தனரா என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.1 ரமேஷ்குமார், அ.சா.2 ராமசந்திரன் ஆகிய இருவரும் தலைக்கவசம் அணியாமல் ஓட்டுநர் உரிமம் இல்லாமல், காப்பு சான்று இல்லாமல் இருந்ததால் அவர்களுக்கு எதிராக ஏதேனும் மோட்டார் வாகன சட்டப்பிரிவின் கீழ வழக்கு பதிவு செய்தேனா என்றால் இல்லை.

12) எதிரி மீது மட்டும் ஏன் மேற்சொன்ன மோட்டார் வாகன சட்டப்படி பிரிவுகள் சேர்த்துள்ள நிலையில் காயம்பட்டவர்களும் அவ்வாறே சாலை விதிகளுக்கு மாறாக வந்த நிலையில் என்ன காரணத்திற்காக மேற்சொன்ன சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எதிரி மீது தவறு உள்ளதால் சட்டப்பிரிவுகளை சேர்த்தேன். ஆக காயமடைந்த நபர்கள் சாலை விதிகளுக்கு மாறாக நடந்து கொண்டார்கள் என்றால் நான் விசாரித்த வகையில் காயமடைந்த நபர்கள் சாலை விதிகளை மதித்து நடந்ததாக தெரிந்து கொண்டேன்.

13) என் விசாரணைப்படி சாட்சி ராமசந்திரன் எதிரியின் இரு சக்கர வாகனம் தான் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் அவ்வாறு இல்லை. அ.சா.1ன் இரு சக்கர வாகனம் மோதியதாக தான் சொல்லியுள்ளார். நீதிமன்ற சாட்சியத்தில் எதிரியின் வாகனம் மோதியதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். அ.சா.3 பெரியண்ணன் என் விசாரணையில் எதிரியின் மீது தவறில்லை என்றும் அ.சா.1 ஓட்டி வந்த இரு சக்கர வாகனம்

தான் அ.சா.3 பயணம் செய்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு இல்லை.

14) பொதுவாக முன்னால் செல்லும் இரு சக்கர வாகனத்தின் மீது பின்னால் வரும் இரு சக்கர வாகனம் முன்னால் சென்ற இரு சக்கர வாகனத்தின் பின்புறமாக மோதினால் அந்த வாகனத்திற்கு பின்புறமாக சேதம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் அது மோதும் தன்மையை பொறுத்தது. புகார்தாரரின் இரு சக்கர வாகனத்திற்கு எந்த சேதமும் இல்லை என்றும் அவர் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்தே ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

15) இவ்வழக்கின் மகஜர் சாட்சியான அ.சா.5 பார்த்திபன் வரைபடம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் என் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை. நான் சம்பவயிடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாக சம்பவயிடம் சென்றிருந்தால் எந்த வாகனம் மீது தவறுள்ளது என்று விசாரித்து முறையாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருப்பனே் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.